Registered as a News Paper in Ceylon

P. M. G. No. H. A. 59/300 of 1953.

# இந்து சாதனம்

விரோதி ௵ (1889) ஆவணி ௴ 28௳ ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளி வருவது — தனிப்பிரதி: சதம் 10

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத்-௬௯] யாழ்ப்பாணம்:- ஏவிளம்பி ௵ தை ௴ ௪௳ வெள்ளிக்கிழமை (17 JAN 1958) [இல-௩௧]

## மாகாண அதிபரின் விளக்கம்

### எண்ணெய்க் கட்டுப்பாடு ஏதற்காக?

யாழ்ப்பாணத்தில் மண்ணெண்ணெய்க்கும் பெட்ரோலுக்கும் விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடு சம்பந்தமாகப் பொதுமக்களுக்கு வடமாகாண அரசாங்க அதிபர் திரு. எம். ஸ்ரீ காந்தா அவர்கள் ஓர் அறிக்கை விடுத்துள்ளார். அது பின்வருமாறு:

யாழ்ப்பாணப் பகுதியில் பெட்ரோல், மண்ணெண்ணெய் ஆகியவைகட்கு அனுமதிச்சீட்டு வழங்கும் முறை நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது பற்றி பொதுமக்களிடையில் ஓரளவு தப்பபிப்பிராயம் நிலவுவதாகத் தோன்றுகிறது வழமையாக இப்பகுதியில் தினசரி பதினாயிரம் கலன் பெட்ரோல் தேவைப்படுகிறது. ஆனால் தற்போதைய நிலைமை காரணமாக இதில் பாதிக்குப குறைவாகத்தான் இப்போது கிடைக்கக்கூடியதாயுள்ளது அநுமதிச்சீட்டு முறையினால் மக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களை நாம் உணருகிறோம். இக் கட்டுப்பாட்டை விரைவில் நீக்குவதற்காக இப்பகுதிக்கு அதிக பெட்ரோலைக் கொண்டுதருவதற்குப் பெற்ரோல் கொம்பனிகளைத் தூண்டும் முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. இந்த நோக்கத்துடன் ஒரு சிறிது சேமித்தும வைக்கப்படுகிறது. ஒருவார காலத்தில் இக்கட்டுப்பாடு நீக்கப்பட்டுவிடலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது ஒவ்வொரு குடியிருப்பாளருக்கும் வாரத்திற்கு அரைப் போத்தல் மண்ணெண்ணெய் உத்தரவு பெற்ற வர்த்தகர்கள் மூலம் வழங்கப்படுகிறது. இதற்கு வாரம் பதினாயிரம் கலன் மண்ணெண்ணெய் தேவைப்படுகிறது. விவசாய வேலைகள் ஆரம்பமானதும் நீர்ப்பாய்ச்சல் வேலை செய்வதற்கும் மற்றும் உபயோகங்களுக்கும் பெருமளவில் மண்ணெண்ணெய் தேவைப்படும். குறைந்தது ஒருவாரத்திற்கு இருபதினாயிரம் கலன் மண்ணெண்ணெய் ஆவதுதேவை. இந்த நிலையில் மண்ணெண்ணெய்க்குள்ள கட்டுப்பாட்டு முறையை இன்னும் சிறிது காலத்திற்காவது தொடர்ந்து வைத்திருப்பதைத் தவிர வேறு வழியில்லை. இதே சமயம் கிடைக்கும் போக்குவரத்துச் சாதனங்களைக் கொண்டு சாத்தியமான அளவு மண்ணெண்ணெயை இப்பகுதிக்குக் கொண்டுவரச் சமாசங்கள் தீவிர முயற்சி செய்கின்றன.

#### தவறான அபிப்பிராயம்

எண்ணெய்த் தாங்கியந்திர வண்டிகள் பல யாழ்ப்பாணத்திற்கு வருவதைக்கண்டதும் பொதுமக்கள் பலர் தவறான அபிப்பிராயமடைகின்றனர் இந்த எண்ணெய்த் தாங்கிகள் யாழ்ப்பாணத்திற்கு மண்ணெண்ணெய் பட்டும் கொண்டு வரவில்லை. சீமெந்துத் தொழிற்சாலைக்குத் தேவையான 'டீசல்' எண்ணெய் முதலியவைகளையும் கொண்டு வருகின்றன. சிமெந்துத் தொழிற்சாலைக்கு தினசரி 7,500 கலன் எண்ணெய் தேவைப்படுகிறது.

#### சிக்கனம் தேவை

சாத்தியமானவரை மண்ணெண்ணெயை சிக்கனமாகப் பாவிக்கும்படி பொதுமக்களைக் கேட்டுக் கொள்கிறேன். சமாசங்களின் ஒத்துழைப்புடன் எண்ணெய் விநியோகத்தில் துரித அபிவிருத்தியிருக்குமென்றும் விரைவில் கட்டுப்பாடு நீக்கப்பட்டுவிடுமென்றும் நம்புகிறோம்

அரசியல் அலை

## அமைச்சரை அமைச்சர் அதட்டும் காட்சி

———:0:———

### ஆனால்— ஆட்சியாளருக்குள் அவ்வளவு பிளவில்லையாம்!!

### சமாதானம் சொல்லிச் சமாளிக்கும் பிரதமரின் தந்திரம்!!

பச்சை மண்ணும் சுட்ட மண்ணும் ஒட்டிக்கொள்வது சாத்தியமல்ல என்று கூறுவார்கள். ஆனால் மக்கள் ஐக்கிய முன்னணி மந்திரசபை அவ்வாறு சேர்க்கப்பட்ட கலவையாயிருந்தும் இரண்டாண்டுகளுக்கு நின்றுவிட்டது பெருங்காரியம்.

களனிக்கும் தம்படெனியாவுக்கும் அங்கத்தவராக விளங்கும் திரு. சேனநாயக ஐ. தே. கட்சி மந்திரியாகவுமிருந்தவர். பல்வேறு விதமாக அநுபவமுள்ளவர். இவர் பண்டாரநாயக ஆட்சியாளருக்குள் ஓடும் புளியம்பழமுமாக ஒருவாறு காலங்கழித்துக்கொள்கின்றாரென்றே பொதுக் கதையிருக்கின்றது. நெற்காணிச் சட்டத்தைப்பற்றி முற்றிலும் மறுத்துப்பின் சற்று அடங்கியிருந்தவர். (விவாதத்தின்பொழுது வெளியூரிலிருந்தவகையிற் பிடிபடாது விலகிவிட்டார்) இந்த மந்திரியாருடன் அந்தச் சர்வாதிகார மந்திரியார் பிலிப்பு நேருக்கு நேராக மோதிக்கொள்ளும் சந்தர்ப்பம் ஒன்று நிகழ்ந்துவிட்டது இது பிரதமரையும் கலக்கிவிட்டது. என்றாலும் சாந்தி சாந்தி என்று திரு. பண்டாரநாயக காலத்தைக் கழிக்கின்றார்.

போக்குவரத்து மந்திரியார் பிரதமரின் அத்தியந்த நண்பர். ஐ. தே. கட்சியிலிருந்து திரு. பண்டாரநாயகவுக்காக விலகியவர். அவ்வளவு ஆர்வமுள்ள திரு. மைத்திரிபாலா சேனநாயகவும் மந்திரிசபையை விட்டு வெளியேற எண்ணினார் என்று வதந்தி வெளியானது. காரணம் கொழும்புத் துறைமுகக் குழப்பமா?

அமைச்சரை அமைச்சர் அதட்டி அடக்கி ஆளும் காட்சியை மக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் தான் முதலிலே இந் நாட்டிற்கு அளித்தது என்ற பெருமை திரு. பண்டாரநாயகவுக்கேயுரியது. மந்திர சபை யென்றால் நல்ல யோசனை புரியும் அறிஞர்கள் கொண்ட சபையாயிருப்பதுதான் வழக்கம். ஆனால் இலங்கையிலே வேற்றுமையான கருத்துக்களையுடைய அமைச்சர்கள் ஒருவருக்கொருவர் அமையாது நடக்கும் முறைதான் காணப்படுகின்றது.

தொடர்ச்சி 6-ம் பக்கம்

## உயர்ந்த ஒழுக்கத்துக்குச் சத்தியம்

———o———

### இன்பம் அடைதற்கு

#### எல்லாச் சமயங்களும் காட்டும் வழி

சமயம் என்பது மக்களையும் கடவுளையும் தொடுக்கும் ஓர் சங்கிலியாகும் வாழ்க்கைக்கு வேண்டிய விதிகளைச் சமயம் வகுத்திருக்கின்றது. தெய்விக வாழ்க்கை எவ்வாறு வாழலாமென்று சமயம் எங்களுக்கு அறியத் தருகின்றது பசளை, தண்ணீர் ஆகியவை இல்லாமல் எவ்வாறு ஓர் மரம் வளரமாட்டாதோ அவ்வாறே சமயமில்லாது மனிதன் முன்னேற மாட்டான். அதுவே ஆத்மஞான வேட்கையுடையோருக்கு உயிர்வாழ்க்கையின் ஒருமைப்பாட்டையும் அகில உலக அன்பின் அடிப்படையையும் விளக்குவதாயிருக்கின்றது.

எங்கும் நிறைந்து எல்லாம் வல்ல இறைவன் இருக்கின்றார் அவரையறிந்தடைதலினால் நாங்கள் நித்தியமான பேரின்பத்தை யடையலாம். எல்லாச் சமயங்களும் இவ்வுண்மையை ஏற்றுக்கொள்கின்றன. இது எல்லாச் சமயங்களுக்கும் உயிர்நாடியாயுள்ள ஓர் கொள்கையாயுள்ளது.

ஒருவர் இறைவனை யடைவதற்கு சத்தியம், தாழ்மை, அவாவின்மை, சுயநல வேட்கையின்மை முதலிய பண்புகளை யுடையரா[illegible] வேண்டும். தெய்[illegible] விரும்புவோர் ஆசை கோபம் அகங்காரம் முதலிய தீய குணங்களில்லாதாராதல் வேண்டும் இதுவே எல்லாச் சமயங்களும் ஏற்றுக் கொள்ளும் விசேட சாதனையாகும்.

இறைவனை யடைதற்குச் சாதகமாக உயிர்கள் மாட்டு அன்புப் பண்பு வளர்க்கப்படுதல் வேண்டும். அடக்கமும் ஒழுக்கச் சிறப்பும் உடையராயிருத்தல் வேண்டும். அடியார்மீதும் கடவுள்மீதும் பயபக்தி யுடையராதல் வேண்டும். சமய நூல்களைக் கற்றுக் கடவுள் நம்பிக்கையுடையராதல் வேண்டும்.

இறைவனை நேர்முகமாகத் தரிசனஞ் செய்தற்கு ஒழுங்காகத் தியானஞ் செய்தல்வேண்டும். அடியார் சகவாசம் செய்தல் வேண்டும். ஆடம்பரமில்லாது வாழ்ந்து புலன்களையடக்குதற்கு வேண்டிய விரதங்களையனுட்டித்தல் வேண்டும்.

பிறன்மனை தழுவுதல் பாவம்; பிறர் பொருளைக் கவர்தல் பாதகமான செயல்; பொய் சொல்லுதல் பிழை, மற்றொருவனைக் கொல்லுதல் துஷ்டச்செயல். இச்செயல்கள் மனிதனைப் பிறந்தவனை மிருகமாக்கி எரிவாய் நரகுக்கு ஆளாக்குகின்றன. எல்லாச் சமயங்களும் இதை ஒப்புக் கொள்ளுகின்றன.

[illegible] எது என்று ஒருவர் வேறுபடுத்திக் காணக் கூடியதாயிருத்தல் வேண்டும். அப்படிக் காணக்கூடியதாயிருந்தால் மாத்திரமே ஒருவர் இன்ப வாழ்க்கை எய்தக் கூடியதாகும்.

ஒருவர் உடல் அபிமானத்தை விட்ட இடத்திலேயே உண்மைச் சமய வாழ்க்கை ஆரம்பமாகின்றது. சிறுச்சிறு சமுகக் கட்டுப்பாடுகளிலிருந்து நீங்கும்பொழுதே உண்மைச் சமய வாழ்க்கை உருவாகின்றது. விரிந்த அறிவும் பரந்த அன்புமுடைய ஒருவருக்குச் சிறு கட்டுப்பாடுகள் தேவைப்படமாட்டா.

எல்லாச் சமங்களும் உயர்ந்த ஒழுக்க முறைகளைப் போதிக்கின்றன. ஆனால் அவற்றை வாழ்க்கையிற் கடைப்பிடித்தற்குச் சத்தியசீலம் வேண்டும் இதுஎங்கள் சமுகத்தில் இலகுவாகக் காணமுடியாத ஓர் பண்பாய்விட்டது ஒருவருடைய உண்மையான சாதனை மக்கள் உள்ளத்தில் உண்மையைப் பதிக்கின்றது. உண்மைச் சாதனையைப்பற்றிய பேச்சுக் காதுக்கினிமையாயிருக்கின்ற அளவில் நின்றுவிடுகின்றது. போதனையானது ஓர் சீவனோபாயமாய்விட்டது. சாதனை வெறுத்துத் தள்ளப்படுகின்றது.

சமயங்களின் உண்மைப் பொருள்களை யாவரும் நன்கு விளங்குவீர்களாக. விசேடமான உண்மைக்கும் மற்றதற்குமுள்ள வேறுபாட்டைக் காண்பீர்களாக. எல்லாச் சமயங்களிலுமுள்ள உண்மையைக் கண்டு ஒற்றுமையாக இன்புற்று வாழ்வீர்களாக,

(சுவாமி ஸ்ரீ சிவானந்தா அவர்கள் எழுதியகட்டுரையின்சாரம்.)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்


# இந்துசாதனம்

ஏவிளம்பி ஹு தை மீ சஉ வெள்ளிக்கிழமை


## பொங்கலின் பின் புத்துயிர்

——

மார்கழித் திங்களில் மக்கள் இயற்கையின் சீற்றத்தாற் பேராபத்துக்காளானார்கள். வருந்தினுர்கள் அல்லற்பட்டார்கள். ஆனல் துன்பமும் இன்பமும் தொடர்ந்து மாறி மாறி வருவதே காலத்தின் கோலமாகும். தைத் திங்களிலே எத்தன்மையான ஈடேற்றம் கிடைக்குமென்பது மக்களையே பொறுத்திருக்கின்றது. முயற்சி திருவினையாக்குமென்றுங்கு ஊக்கங் கொண்டுழைப்பதனலேயே சமூகம் புத்துயிர் பெறும் என்பது வரலாறு கற்பிக்கும் உண்மை. இறைவன் இன்னருள் பெறுவதற்குரியவர்களாய் மக்கள் முயன்று வருதலவேண்டும்.

மன்னார்ப் பகுதியிலே பொங்கியெழுந்த வெள்ளம் குளங்களையெல்லாம் உடைத்து மக்களுக்குச் சொல்லொணு இன்னலை விளைவித்தபொழுது திருக்கேதீச்சரத்திலே தொண்டர்களால் அமைக்கப்பெற்ற திருஞானசம்பந்தர் மடம் நாவலர்மடம் முதலியன திருவருளின் பயனுகப் பயனளித்து கதியற்றவர்களுக்குப் பாதுகாப்பளித்தன.

மக்கள் வாழ்வாங்கு வாழ்வதற்கு இறைவழிபாடே முதற்கண் வேண்டப்படுவது இந்த உண்மையை அரசியல் வாதிகளும் ஆட்சியாளர்களும் நன்குணர்ந்து அவ்வழி ஒழுகுவது அவசியமாகின்றது. தனக்கென வாழும் தன்னய வாழ்க்கையை மறந்து பிறர்க்கென வாழ்வதற்கு உரிய ஒழுக்க நெறியை முன் மாதிரியாகச் செய்கை முறையிற் காண்பிக்க வேண்டியது தலைவர்கள் கடமை. இவ்வாறு மனமாற்றம் எழுமேயாளுற் பொங்கலின் பின் இந்நாடு புத்துயிர் பெற முடியும் அல்லவா?

இடுக்கட்பட் டிருக்கினு
மிரந்தி யாரையும்
விடுக்கிற் பிரானென்று
வினவுவோ மல்லோம்
அடுக்கற்கீழ்க் கிடக்கினு
மருளி ளுமுற்ற
நடுக்கத்தைக் கெடுப்பது
நமச்சி வாயவே.

## புதுவிதப் போக்கு வரத்து

—0—

மக்கள் ஐக்கிய முன்னணி ஆட்சியின் மகத்துவத்தைக் காட்டும் திட்டம் என்று பாராட்டப்பெற்ற தேசிய மயமான விசை வண்டிப் போக்குவரத்து, பதினேழு நாட்களாக நடைபெறும் தன்மையை நோக்குமிடத்து, ஆளுங்கட்சிக்கு அவமானத்தைக் கொண்டுவரவிருக்கின்றது என்றே தோற்றுகின்றது.

பங்காளர்கள் சங்கமாகச் சேர்ந்து விசை வண்டிப் போக்குவரத்தை நடத்திய காலத்திலே மேலதிகமாக ஆதாயம் இருந்ததென்றும் அதற்குத் தக்கதாகப் பயணஞ் செய்வோரின் வசதிகள் கவனிக்கப்படவில்லையென்றும் சமூக நலனுக்குப் பொருந்தாதென்றும் குற்றஞ் சாட்டிக்கொண்டே மக்கள் ஐக்கிய முன்னணி ஆட்சியாளர் தேசிய மயத்திட்டத்தைக் கொணர்ந்தனர். ஆனல் நடைமுறையிலே உள்ளதையுங் கெடுத்தான் கொள்ளிக்கண்ணன் என்றபடி விசை வண்டிப் போக்கு வரத்து சீர்கெட்டு வருகின்றது.

நல்ல நிலையில் விசைவண்டிகள் போதியளவு இல்லாமையே வசதியீனத்துக்குக் காரணம் என்று சமாதானம் சொல்லப்படுவதை நாமும் அறிவேம். ஆனல் இப்பொழுது சேவைக்குரியதாகவுள்ள வண்டிகளுடன் பழைய போக்குவரத்து நிலைமையளவிலாவது வசதிகள் அளிக்கப்படாதிருப்பதற்கு போக்குவரத்து மந்திரியார் என்ன சமாதானங் கூறுவாரோ யாமறியேம்.

பயணச் சீட்டுக்கள் வழங்கும் முறையும் பணம் பெறும் ஒழுங்கும் புதுவிதமாக நடைபெறுவதனலேயே விசைவண்டிகள் தாமதமாகப் புறப்பட வேண்டியிருக்கின்றன என்று பயணஞ்செய்வோர் கருதுகின்றார்கள். வண்டிக்குட் செல்வதற்கு வரிசை ஒழுங்குமுறை வகுக்கப்படுவதும் பயணச் சீட்டுகளில் இடங்களும் பணத்தொகையும் எழுதப்படாமல் அச்சிடப்பெற்று வழங்கப்படுவதும் அத்தியாவசிய தேவைகள்.

முன்னேற்றத்துக் குரிய பாதையில் மக்கள் முன்னணி செல்கிறது என்ற போலிப் பேச்சில் ஈடுபடுவதை விட்டு ஆட்சியாளர் பொதுசனத்தின் வசதிகளைப்பற்றி ஆராய்ந்து ஆவன செய்வது அரசியற் கடமையாகும்.

—0—

### நகரசபைத் தலைவருக்கு வரவேற்பு

——

யாழ்ப்பாணம் நகரசபைத் தலைவர் திரு பொ. காசிப்பிள்ளைக்கும் அங்கத்தவர்காதி சுலுத்தானுக்கும் ஒரு வரவேற்பு 11-ம் 12-ம் வட்டார மக்களால் [illegible] கப்பட்டது திரு. க. [illegible] னம்பலம் நியாயதுரந்தரர்

## தேவதோட்டத்தில் தமிழ்த் திருநாள் விழா

சென்ற செவ்வாய்க்கிழமை தைப்பொங்கலன்று 14-1-58 பிற்பகல் 4 மணியளவில் "தேவதோட்டத்தில்" யாழ், கமக்காரர்கள் சங்கத்தலைவர் திரு. நா. சேனாதிராசா அவர்களின் தலைமையில், "தமிழ்த்திரு விழா" நடைபெற்றது. முதலில், அம்மை அப்பனின் பூசை நடைபெற்று, தமிழ் மறை ஓதி, கூட்டம் தொடங்கியது. தலைவர், தமது தலைமைப் பேருரையில் உலகிலுள்ள எல்லா மக்களும் தங்கள் தங்கள் சமயத்திற்கும், சாகியத்திற்குமேற்ப, திருநாள்களைக் கொண்டாடுகின்றார்கள். அதேபோல, இலங்கைத் தமிழ்மக்களாகிய நாங்களும் இன்று "தமிழ்த் திருநாளை"க் கொண்டாடுகின்றோம். சீர்திருத்தம், மரபு, பண்பாடு, கலை, கலாச்சாரப் இவைகளில் மேலோங்கி வளர்ந்த தமிழ்ச்சாகியம், இலங்கையில் இன்று சீதள தசையை அடைந்து, செய்வதின்னதென்றறியாது திகைத்து நிற்கின்றது இதற்கு முக்கியமான காரணம் இரண்டு. ஒன்று சிறுபான்மையினரானது, மற்றது தமிழ்த் தலைவர்களின் ஒற்றுமையின்மை. இலங்கையில் இரண்டு கண்கள்போலச் சிங்களவர்களும் — தமிழர்களும் பிறந்தும், இநசாகியத்தாரும் பாஷையாலும் — சமய அனுஷ்டானத்தாலும் வேற்றுமை உடையவர்களாயிருக்கின்றார்கள். கூடிய தொகையினரான சிங்கள மக்கள், தங்கள் ஆளும் சாதியினரென்றும் குறைந்ததொகையினரான தமிழ் மக்கள், ஆளப்படும் சாதியினரென்றும் எண்ணிவிட்டார்கள் இன்று, இலங்கையில் நடக்கும் இராச்சியம், 'சிங்கள இராச்சியம்.' முன் வெள்ளையர்களின் ஆட்சிபோல, இன்று சிங்களவரின் ஆட்சி நடக்கிறது. சனநாயக ஆட்சியே இல்லை. சனநாயகம் என்று சொல்லி ஏகச்சக்ராதிபத்திய இராச்சியம் நடக்கிறது. தமிழ் மொழிக்குச் சம அந்தஸ்து இல்லை, தமிழ் மக்கள் பண்டுதொட்டு இன்றுவரை வசிக்கும் தமிழ்நாடுகளில், இப்போது சிங்களவரைக் குடியேற்றுகின்றார்கள் இனி வருங்காலத்தில் எங்கள் தமிழ்ப் பிள்ளைகட்கு அரசாங்க உத்தியோகமில்லை தமிழ்நாடும தமிழ் மக்களுமென்றில்லாமல் சிங்கள மயமாக்குகின்றார்கள் இந்த நிலையில் இன்றும் நாளையும், தமிழ் மக்களாகிய நாங்கள் இருக்கின்றோம். இதைக் கண்டும், எங்கள் தமிழ்த் தலைவர்கள் இன்னும் ஒற்றுமைப்பட்டாரில்லை. பண்டாரநாயக — செல்வநாயகம் ஒப்பந்தம் ஒரு போலி ஒப்பந்தம். தமிழர்கட்கு இந்த ஒப்பந்தத்தால் ஒரு பிரயோசனமுமில்லை. பிறப்புரிமை கேட்டதற்கு, பிச்சை கொடுத்தவிதம்போலானது இந்த ஒப்பந்தத்தால் ஏற்பட்ட விளைவுகள். தமிழிற்குச் சம அந்தஸ்துப் பெறும்வரை, தமிழர் வாளாவிருக்கக் கூடாது சம அந்தஸ்துப் பெற்றால்தான், நாம் உலகில் ஓர் கௌரவமான சாகியத்தாராவோம். இல்லையேல் 400 வருடகாலமிருந்த அடிமைகள் இனிமேல் சதா அடிமைகளாயிருக்கவருப. இப்போது வாழுப இலங்கைத் தமிழராயுள்ள நாம மாத்திரமல்ல இனி வரும் பின் சந்ததியாருப அப்படியே அடிமையாய் வாழ நேரும். மொழிப் பெருமையில்லையேல் வேறு பெருமை ஏது. இது ஒருபுறமிருக்க, எங்கள் பொருளாதார நிலையோ மிகவும் கேவலம். மலையாளத்திலிருந்து வந்த புகையிலைப்பணம் கமக்காரர்கட்கு நின்றுவிட்டது. பெருந்தொகை செலவிட்டு வெண்காயப உண்டாக்கினல் அரசாங்கம் விலைக்கட்டுப்பாடு செய்வதுடன், தடை உத்தரவுகள் போடுகிறது பிழையான சமயத்தல் இந்தியாவிலிருந்து வெண்காயத்தை வரச்செய்து இந்த வெண்காயத்தை நஷ்டத்திற்கு விற்கச் செய்கிறது. மலாயாவிலிருந்து வந்த பணம் நின்றுவிட்டது. கைத்தொழில் இல்லை சமவிருத்திச்குரிய உதவிகளில்லை எங்கள் பிள்ளைகள் படித்துச் சித்திபெய்தினலும் உத்தியோகமில்லை உத்தியோகமில்லாவிட்டாலும் வேறு பிழைக்கவழியில்லை. இந்த வெள்ளப்பிரவாகத்தால் ஏற்பட்ட நஷ்டம் கொஞ்சமல்ல முன் காற்று அழித்தது. இப்போது வெள்ளம் அழித்தது. உணவுக்கே பெருகஷ்டம் வரப்போகின்றது. உணவுப் பொருட்களை வைத்து உண்டாக்க வேண்டும். பருத்தி உண்டாக்கி, நூல்நூற்று, நெசவுத்தொழில் செய்தல் வேண்டும், தமிழ் மக்கள் ஒற்றுமையாயிருக்க வேண்டும் என்று சொல்லி முடிந்தபின், காரியதரிசி ஸ்துதிகூறி. தமிழ்மறை ஓதி, கூட்டம் இனிது முடிவெய்தியது.

தலைவரையும் காதி சுலுத்தானையும் பாராட்டிப் பேசித் தமிழர் இசுலாமிய [illegible] என்று குறிப்பிட்டார்.

## புகைவண்டிப் போக்குவரத்து

### புது மாற்றங்கள்

இன்று தொடக்கம் திருக்கோணமலைக்கும் கொழும்புக்குமிடையே மறுபடியும் புகைவண்டிப் போக்குவரத்து ஆரம்பமாகும் எனப் புகைவண்டிப் பகுதியார் அறிவிக்கின்றார்கள்.

கெக்கிராவைக்கும் அநுரதபுரத்துக்குமிடையே சாமான் போக்குவரத்தும் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றனவாம்.

கொழும்பிலிருந்து காலை 6-45க்குப் புறப்படும் வண்டி கெக்கிராவையிலிருந்து 2 மணி பிற்பகல் புறப்பட்டுத் திருக்கோணமலையை 6-50 காலை சேரும் என்பது திட்டம்.

இவ்வாறே திருக்கோணமலையிலிருந்து காலை 8-20 மணிக்குப் புறப்படும்வண்டி கெக்கிராவையிலிருந்து கொழும்புக்குப் போகும் பிற்பகல் 2-30 மணி வண்டியுடன் இணைக்கப்படும்.

தலைமன்னர் துறைக்கும் முருங்கனுக்குமிடையிலே புகைவண்டிப் போக்குவரத்து மீண்டும் ஆரம்பமாகின்றது. முருங்கனுக்கும் கெக்கிராவைக்குமிடையிலே மோட்டார் வண்டிப் போக்குவரத்து இணைப்பு வேலையைச் செய்யும்.

## வாழ்க்கை வானில்

— வளர்மதி

### பாடிகாவலரைப் பயமுறுத்தினரா?

கொழும்புத் துறைமுகத்தில் உத்தியோகத்தர் வேர்னன் பீரிசைத் தாக்கியதாகக் குற்றஞ் சாட்டப்பட்ட அன்ரன் பெரோவைப் பாடிகாவலர் கைதுசெய்யப்படாதென்றும், கைதி செய்தால் அதனற் பாரதூரமான விளைவுகள ஏற்படுமென்றும் மந்திரியார் பிலிப்பு குணவர்த்தன கொழும்பு முற்கரையோரப் பாடிகாவலர் நிலையத்திலுள்ள உத்தியோகத்தருக்குத் தொலைபேசி மூலம் எச்சரிக்கை செய்ததாகச் செய்தித் தாள்கள் கூறுகின்றன.

இதற்கு முன் பிரதமர் பீரிசைத் தாக்கியதுபற்றி ஒரு ஆலோசனை நடத்தினரென்றும் அப்பொழுது தாககியவரின் வழக்கறிஞரும் சமூகமாயிருந்தாரென்றும் வழககொழுங்கு மரபுக்கு மாறாகப் பிரதமர் நடந்தி கொண்டாரென்றும் கொழும்புத் தினசரி (ஆங்கிலம்) தலையங்கத்திலே குறிப்பிட்டிருந்தது.

இவற்றையெல்லாம் ஒருமித்து நோக்கும்பொது மந்திரசபை தனியாட்சிச் சபையாய் சர்வாதிகார பீடமாய் மாறிவிட்டதுபோலத் தோன்றுகின்றது.

### தேசிய மயமாக்கினல் தீர்ந்துவிடுமாம்!

கொழும்புத் துறைமுகத்துப் பரிபாலனத்தைத் தேசியமயமாக்கிவிடவேண்டுமென்று மந்திரியார் பிலிப்புக் குணவர்த்தனவின் தொழிற் கட்சியார் கேட்கின்றார்கள். பிரதமரும் அவ்வாறு செய்வதே உகந்ததெனக் கூறுகின்றார். விசை வண்டிப்போக்குவரத்தைத் தேசிய மயமாக்கிவிட்டபின் பொதுசனம் படும்பாட்டை நோக்குமிடத்துக் கொழும்புத் துறைமுகத்திலே குறைக்குரக்கன் திரிப்பதற்கு வழியாகுமா தேசிய மயத்திட்டம் என்று அச்சங்கொள்ள வேண்டியிருக்கின்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## சிங்கள மகாசபையின் சீற்றம்

### உணவு மந்திரியை நீக்கவேண்டும்

**அல்லது முதல் மந்திரியே நீங்கவேண்டும் என்று பிரேரணை**

அணிமையில் நடந்த சிங்கள மகாசபைக் கூட்டத்தில் உணவு மந்திரியின் செயல்கள் வன்மையாகக் கண்டிக்கப்பட்டன. அவ்வாறு கண்டிக்கப்பட்ட தோடமையாது அவரை மந்திரிப் பதவியிலிருந்து உடனே நீக்குதல்வேண்டும் என்ற கருத்தையும் வெளியிட்டுப் பல பிரேரணைகள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன. அவற்றுள் ஒன்று பின்வருமாறு பேசுகின்றது.

வெள்ளத்தாலும் வறுமையாலும் வேலைநிறுத்தத்தாலும், அச்சத்தாலும் வேலையில்லாத் திண்டாட்டத்தாலும் வருந்தும் இலங்கை மக்கள் பெரும்பான்மையினரின் ஏககுரலாயமைந்து, உணவு மந்திரி பதவியிலிருந்து உடனே நீக்கப்படுதல் வேண்டும், அல்லது நாட்டை விடுகாலித்தனத்துக்கும், குழப்பத்துக்கும், அழிவுக்கும், கதியற்ற நிலைமைக்கும் உள்ளாக்கும் வகையில் உறுதியில்லாது ஆட்சி புரிந்துவரும் முதல் மந்திரி உடனே நீங்குதல் வேண்டும் என்று இக்கூட்டம் தீர்மானிக்கின்றது.

## புகையிலை ஏற்றுமதி ஒப்பந்தம்

இலங்கை இந்திய அரசாங்கங்களுக்கிடையிற் செய்யப்பட்ட ஓர் வியாபார ஒப்பந்தத்தில் யாழ்ப்பாணத்தின் புகையிலை இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யும் ஒழுங்கொன்று செய்யப்பெற்றுள்ளது. இது 1961ம் ஆண்டு வரையும் நிலைக்குமென்று அறியவருகின்றது.

—0—

## இலங்கையருக்கு அடையாளச் சீட்டு

பதினெட்டு வயசுக்கு மேற்பட்ட இலங்கை மக்களுக்கு அடையாளச் சீட்டுக்கள் வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாம். கள்ளமாகக் குடியேறுவோரைக் கண்டுபிடித்தற்குச் சாதகமாக இது கையாளப்படுகின்றது. தேர்தற் காலத்திற் கள்ளச் சீட்டுப் போடுதலைத் தவிர்க்கவும் இது உதவுமென்று கருதப்படுகின்றது. இதற்கு எண்பது இலட்சம் ரூபா செலவாகுமாம்.

# சைவக் குருபீடம்

## யாழ்ப்பாணத்தில் அமைக்கவேண்டும்

ஈழநாட்டின் மிகத் தொன்மை வாய்ந்த நகரம் மாதோட்டமாகும். இந்நகரமே சைவத் தமிழர்களின் இராசதானியும் குருபீடமுமாகும். இத்தகைய மாதோட்ட நகர் பறங்கியர் ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்திலும் தமிழரசர்களின் படையெடுப்புக் காலத்திலும் அழிந்தொழிந்து போயின.

பின்பு சைவத் தமிழர்களின் அருந்தவப் பேறுய்த் திகழப் பரமேஸ்வரன் திருவருளால் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் ஐயா அவதாரமானுர். அவர் அவதரித்த பின், இலங்கைத் தமிழர்களின் சிரசாகிய யாழ்ப்பாணம் சைவஇராசதானியாயும், சைவ பரிபாலன குருபீடமாயும் அமைந்தது. இங்கிருந்தே இலங்கையின் பல பாகங்கட்கும் தமிழகத்திற்கும் மலாய் நட்டிற்கும் சைவம் பரவியது.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலருக்குப் பின் அவர் வழியில் வந்த பல சைவப் பெரியார்கள் சைவத்தையும் தமிழையும் வளர்த்தார்கள். அவர்கள் சைவசித்தாந்த அறிஞர்களாகவும் தமிழ் சமஸ்கிருதம் எனும் இரு பாஷை வல்லுநர்களாகவும் ஒழுக்கமுள்ளவர்களாகவும் துறவுள்ளம் பூண்டவர்களாகவும் இருந்து சைவத்தை வளர்த்தார்கள். நாவலர் ஐயாவுக்குப் பின் திரு. த. கைலாசபிள்ளை தொடக்கம் ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமாரத் தம்பிரான் ஸ்ரீமத் சிவபாதசுந்தரனுர் ஈருக இருந்த சைவப்பெரியார்களின் அறிவையும் தொண்டையும் அவர்கள் பண்பாடுகளையும் தவ ஒழுக்கங்களையும் யார்தான் அறிய வல்லார்.

அவர்களின் ஆத்மீகச் சைவப்பிரகாசமே இன்றும் யாழ்ப்பாணத்தில் சைவத் தென்றலாக வீசிக்கொண்டிருக்கிறது. எவ்வித புயலோ வெள்ளமோ யாழ்ப்பாணத்திற்கு வந்தபோதும் சைவத் தென்றலானது அவற்றின் வேகத்தைத் தடுத்து சாந்தியை நிலவச் செய்கிறது. இலங்கையில் பெரும்பாலும் தமிழர் வாழும் இடங்கள் வடமாகாணமும்கீழ்மாகாணமுமாகும். இந்த நாடுகளிலேயே சைவம் நிலைத்திருக்கிறது இந்த நாடுகளில் புராதீன கோயில்கள் கல்

— செ. கோ. —

லூரிகள் பாடசாலைகள் இருக்கின்றன. இதனுல் மக்களைச் சமய வாழ்க்கையில் ஈடுபடச் செய்யவேண்டிய கடமைகளும் பல இருக்கின்றன. நாகரீகப் போக்குள்ள அரசியல் இராசதானிகளிருந்துகொண்டு சைவத்தை வளர்க்கவோ அதன்படி ஒழுகவோ முடியாது ஆகவே தமிழர்களின் பரம்பரைச் சைவ பரிபாலன குருபீடத்தைநாடவேண்டும் அதை வளர்க்க வேண்டும். அதிலிருந்து பல சைவத் தொண்டர்களை ஒவ்வொரு கிராமத்துக்கும் அனுப்பிச் சைவப் பிரசாரம் செய்விக்கவேண்டும்.

யாழ்ப்பாண நகரமே சைவத்திற்குக் குருபீடமாய் இருப்பதால் சைவப் பிரதிநிதிகள் இந்நகரையே தமிழர்களின் சைவ இராசதானியாக வளர்த்து வரல் வேண்டும். யாழ்ப்பாணச் சைவபரிபாலன குருபீடத்தை வளர்க்க வேண்டும். இதனைச் சைவச் சபைகளும் சைவ இளைஞர்களும் முதிர்ந்தவர்களும்ஏனையோரும் சிந்திக்க வேண்டும்.

—0—

## சுதந்திர நாளில் துக்கக் கொண்டாட்டம்

இலங்கைநாடு பெற்ற சுதந்திரத்தில் தமிழ் மக்களுக்குள்ள உரிமை இல்லாமற் போனமையாலும் இந்நிலைமை திருந்தக்கூடிய எதுவும் சென்ற பத்து வருடங்களில் நிகழாமையாலும் தமிழரசுக்கட்சிக்கும் முதல் மந்திரிக்கும் இடையிற்செய்யப்பட்ட ஒப்பந்தம் இதுவரையிற் கையாளப்படாமையாலும் மாசி (ஆங்கிலம்) 4-ந் திகதி தமிழ் மக்களின் துக்கநாளாகக் கொண்டாடப்படுதல் வேண்டுமென்று தமிழரசுக் கட்சியின் வாலிபர் முன்னணியார் ஓர் பிரேரணை நிறைவேற்றியுள்ளனராம்.

## கலாசார மந்திரியின் மொழிக்கொள்கை

கலாசார உள்நாட்டு அரசாங்க மந்திரி ஸ்ரீ ஜயவீர குறுப்பு, தமிழ்ப் பகுதிகளிலுள்ள உள்நாட்டு அரசாங்கப் பகுதியில் வேலை செய்யும் தமிழ் உத்தியோகத்தர் சிங்கள பரீட்சையிற் சித்தியடைந்தால் பணப் பரிசு கொடுக்கும் ஒழுங்கொன்றைச் செய்திருக்கின்ருராம். இப்படிச் செய்ய வேண்டிய தேவை என்ன என்று கேட்டபொழுது மத்திய அரசாங்கத்துடன் கடிதப்போக்கு வரத்துச் சிங்களத்திற் செய்யவேண்டியதாற் சிங்கள மொழி அறிவுதேவையாகுமென்று விடையிறுத்தாராம். இக்கொள்கை தமிழரசுக் கட்சி—பண்டார நாயக ஒப்பந்தத்துக்கு முரணுயிருப்பதால் இதுபற்றிய எதிர்ப் [illegible] தீர்மானித்துள்ளனராம்.

சைவபரிபாலனசபை வெளியீடு

**கல்விப் பொதுத் தராதரப் பத்திரத்**

**தேர்வுக்குரிய நூல்கள்**

[ G. C. E. ]

**இலக்கியம்**

கும்பகருணன் வதைப்படலம் (செய்யுள் 1—170)
உரையாசிரியர்: வித்துவான், பண்டிதர் சைவப்புலவர் க. வேந்தனுர் அவர்கள். விளக்கவுரை, தேர்வுவினுக்கள் முதலியவற்றுடன். விலை ரூபா 3-00

**சைவ சமயம்**

பதிப்பாசிரியர்: பண்டிதர் ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை

திருவருட்பயன் விளக்கவுரையுடன்
உரை ஆசிரியர் சு. சிவபாதசுந்தரம் அவர்கள் B. A. விலை சதம் — 75.

திருக்குறள் மூலமும் உரையும் (25 — 34)
ஆங்கில மொழிபெயர்ப்புடன் விலை சதம்—75

சமயகுரவர் சந்தானகுரவர் சரித்திரச் சுருக்கம் ,, ,, —75

தேவார திருவாசகத்திரட்டு உரையுடன் விலை சதம்—65

# வாழ்க்கை முறையை விளக்கும் கல்வி

## காலத்துக்கேற்ப அமைதல்வேண்டும்

'காலத்திற்கும் ஆற்ற வேண்டிய கடமைகளுக்கும் பொருத்தமான ஆண்களையும் பெண்களையும் உருவாக்குவதே கல்வியின் நோக்கமாக இருக்கவேண்டும்". "ஒரு நாட்டை உருவாக்குவோர்கள் அந்நாட்டின் ஆண்களும் பெண்களுமேயாவர். இத்தகைய ஆண்களையும் பெண்களையும் தோற்றுவிப்பது கல்வியே ஆகும்".

"கல்வி முறையானது அந்தந்தக் காலத்துக்கும் அவரவர்கள் செய்ய வேண்டிய பணிகளுக்கும் பொருந்தக்கூடிய முறையில் ஆண்களையும் பெண்களையும் உருவாக்க உதவ வேண்டும். பையன்களும், பெண்களும் நேர்மையான குணத்தையும் வாழ்க்கையைப்பற்றிய சரியான மனப்போக்கையும் பெறக்கூடியபடி அவர்களை வளர்ப்பதற்குச் சில அடிப்படை அம்சங்களைக் கல்விப்போதனை கவனிக்க வேண்டும். ஆனுல் நான் இப்படிச் சொல்வதால் அவர்கள் ஏதாவது ஒரு குறிப்பிட்ட வகையில் அமைந்துவிட வேண்டும் என்று நான் கூறுவது ஆகாது. அவர்கள் நற்குணங்களுக்கு அவசியமான பண்புகளை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்பதுடன், சிக்கல்களை முழுமையாகக் கவனித்துத் தீர்வு காண்பதற்கு முயற்சி செய்யக் கூடிய வகையில் பயிற்சி பெற்றதும் விவரங்களை வரவேற்கக் கூடியதும், சகிப்புத் தன்மையுள்ளதுமான மனப்போக்கையும் வளர்த்துக்கொள்ள வேண்டும். அவர்கள் உண்மையில் எல்லா அம்சங்களும் ஒருங்கிணைந்த மனிதர்களாக வளரவேண்டும்.

நாம் மிகத் தீவிர மாறுதல் நிகழும் காலத்தில் வாழ்கிறேம் என்பது எல்லோருக்கும் தெரிந்ததுதான். இதிலிருந்து நாம் பின்வாங்குவதில்லை; அதை நாம் விளங்கிக் கொள்ள முயல்வதுதான் நம்மால் செய்யக்கூடிய செயல்; தொழிற் புரட்சி சென்ற 50 ஆண்டு காலமாய் உலகத்தின் தோற்றத்தையே மாற்றிவிட்டது. இப்பொழுது நாம் சிந்தித்துக்கூடப் பார்க்க முடியாத ஒரு வேகத்தில் பிரம்மாண்டமான விஞ்ஞான தொழில்நுட்ப முற்போக்குகள் நடந்து வருகின்றன. இவை மனித வாழ்க்கையையும் பழக்கத்தையும் கட்டாயம் மாற்றும்என்பதில் சந்தேகமில்லை. இவைகளுக்குப் பொருத்தமாக எப்படி அமைவது; இன்றியமையாத தன்மைகளை எப்படிக் காப்பாற்றிக் கொள்வது என்பதுதான் இப்போதைய சிக்கலாகும்.

ஆதாரக் கல்வி பல முக்கிய அம்சங்களை வற்புறுத்துகிறது, குறிப்பாக உடலுழைப்புடன் சிந்தனையையும் ஒன்றுபடும்படி செய்வதை அது வற்புறுத்துகிறது. இந்த அம்சத்தை நாம் ஊக்கமாக வற்புறுத்த வேண்டும் என்று பண்டித நேரு அவர்கள் தெல்லிமாநகரில் நடந்த ஓர்மகாநாட்டு வாழ்த்துச்செய்தியிற் கூறினுர்.

விரைவில் வெளிவரும்

**இளைஞர் சமூக வாசகம்**
**1 — 5**

பயிற்சிகளுடன்

ஆசிரியர்:
மா. பீதாம்பரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவன் திருவருள் இன்றியமையாதது

## தெய்வ வழிபாட்டுக்குத் திரிகரணசுத்தி

காரைநகர்ச் சிவன்கோயிலில் நடந்த மணிவாசகர் விழாவில் வித்துவான் திரு. கே. கார்த்திகேசு பி. ஏ. அவர்கள் பேசும்போது உயிர் எவ்வளவுக்கு முயன்ருலும் இறைவன் திருவருளின்றி ஈடேற முடியாது, இறைவன் திருவருளினுல் மாத்திரம் மெய்ஞ்ஞானத்தைப் பெறலாகும் என்று சைவ நூல்கள் கூறுகின்றன குருவருளைப் பெற்ற பின்பே தாம் உண்மை உணர்வு பெற்றதாக மணிவாசகத்தில் மாணிக்கவாசக சுவாமி கூறியிருக்கின்ருர் என்று கூறினர்.

பண்டிதை திருமதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் பேசும்போது பண்டைக்காலமக்கள் திரிகரண சுத்தியோடு இறைவனை வழிபட்டார்கள். இக்காலத்தில் அத்தகைய வழிபாடில்லாமையால் இறைவனுடைய அனுக்கிரகத்தைப் பெறுதலும் குறைந்து வருகின்றது. மணிவாசகப் பெருமான் முதல் மந்திரியாயிருந்தபோதும் தமது மனததை இறைவன்பால் வைத்திருந்தார். அவ்வாஞெழுகியமையாற் குருவருளைப் பெற்றுப் பேரின்ப மெய்தினர் என்று கூறினர்.

## நிற பேதம்

தென்னுபிரிக்க வெள்ளையரொருவர்வெள்ளையரினத்திலில்லாத ஓர் பெண்ணை விவாகம் செய்து ஐந்து பிள்ளைகளையு முடையராம். இவர்கள் இவ்வாறு விவாகம் செய்திருந்தமை சட்ட விரோதமெனக் குற்றஞ் சாட்டப்பட்டு நாலு மாதச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளனராம்.

## கொழும்புமாநகரசங்கக் குலைப்பு வழக்கு

கொழும்பு நகரசபை குலைக்கப்பட்டமை சட்ட விரோதமான செயல் என்று காண்பித்து ஐக்கிய தேசியக் கட்சியார் வழக்குத் தொடருகின்றனரென்றும் அவ்வழக்குத் தொடர்பில் புகழ்பெற்ற ஆங்கில நியாயவாதி ஸ்ரீ டி. என். பிறிற் இலங்கைக்கு வந்திருக்கின்ருரென்றும் அறிய வருகின்றது.

# ஆசிரியரும் - மாணவனும் சம்பாஷணை

எழுதியவர்: சி. கணேசலிங்கஐயர், பா. ஞா. சபை. தெல்லிநகர்

ஆசிரியர்; தம்பி துரைரத்தினம் நீர் இன்று கோவிலுக்குப் போகவில்லையா?

மாணுக்கன்; இல்லை. உபாத்தியாயர் ஏன் கோவிலில் இன்று என்ன விசேஷம்

ஆசி; இன்று நம் கந்தசுவாமி கோவிற் தேர்த் திருவிழாவாகும். இப்படியான விசேட காலங்களிலாவது கோவிலுக்குப் போக வேண்டாமா?

மாணு; வணக்கம். நான் இப்போது சில நாட்களாகக் கோயிலுக்குப் போவதை நிறுத்திவிட்டேன்.

ஆசி; ஏன் காரணமென்ன?

மாணு; கோவிலுக்குப் போவது எல்லாம் வீண் அங்கே போய் நேரத்தை வீணுக்குவதுதானே!

ஆசி; ஒருக்காலும் அப்படிச் சொல்லாதே. ஆலயம் என்ருல் ஆன்மா நயப்படும் இடம் என்பது பொருள். அத்துடன் கடவுள் வழிபாடு செய்தால் அல்லவா நாம் ஈடேறமுடியும்.

மாணு; கடவுள் என்று ஒருவர் இருக்கிருரா?

ஆசி; ஆம். இருக்கிருர்

மாணு; அவர் எங்கே இருக்கிருர்?

ஆசி; அவர் எங்கும் இருக்கிருர். அவர் சர்வ வியாபி. அவர் இல்லாத இடமேயில்லை.

மாணு; கடவுள் இருந்தால் எங்கள் கண்களுக்குக் காணப்படவில்லையே?

ஆசி; அவரைக் காணுவதற்கு ஞானக்கண் வேணடும். எங்கள் சாதாரண கண்களால்காணமுடியாது.

மாணு; கண்களுக்குக் காணப்படவில்லையாதலால் கடவுள் இல்லையென்ருலென்ன?

ஆசி; கண்களுக்குக் காணப்படாத பொருள்கள் யாவும் இல்லையா? காற்று வீசுகிறது. ஆனல் அதைக் காண முடியவில்லை. அதனுல் காறறு இல்லையா? இன்னும் நாம் ஒரு குருடனை எடுத்துககொள்வோம். அவன் பிறவிக் குருடன். அவன் சூரியனைக் காணமாட்டான். அவன் சூரியன் இல்லையென்ருல் அது பொருந்துமா? அது போலவே கடவுளும் நமது கண்களுக்குக் காணப்படவில்லையென்ற காரணத்தால் இல்லையென்று சொல்லுவது தவறு.

மாணு; ஒரு கடவுள் பல வடிவங்களை எடுப்பாரா? அல்லது பல கடவுளா?

ஆசி; கடவுள் ஒருவர் தான். அவரது உருவங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு தொழில் நிமித்தம் கொள்ளும் மூர்த்தங்களாம்.

மாணு; கடவுளைக்காண முடியுமா?

ஆசி; ஆம் காணலாம்

மாணு; கடவுளைக் காண்பதற்கு என்ன செய்ய வேண்டும்?

ஆசி; நம் மனதைத் தூயதாக்கவேண்டும். சைவ அநுட்டானங்களை மேற்கொள்ள வேண்டும். யோக சாதனைகளில் ஈடுபடவேண்டும். இவ்வாறு தினமும் ஒவ்வொன்ருகச் செய்து வருவோமாயின் ஞானக் கண்ணைப்பெற்றுக் கடவுளைக் காணமுடியும்.

மாணு; ஞானக் கண்ணைப் பெற்றுக் கடவுளைக் கண்டவர்கள் யார்?

ஆசி; அப்பர், சம்பந்தர், நாவுக்கரசர், மாணிக்கவாசகர் முதலிய நாயன்மாரும், தாயுமானவர், பட்டினத்தடிகள் முதலிய ஞானிகளும் ஞானக் கண்ணைப் பெற்றுக் கடவுளைக் கண்டார்கள்.

## இந்துசமயப்பிரசாரத்துக்கு அரசாங்க உதவி

இந்துசமயப் பிரசாரத்துக்கு உதவியாக ரூபா 90,000 அரசாங்கம் கொடுப்பதாக அணிமையில் நடந்த இந்துசமயக் கரும ஆலோசனைச் சபைக் கூட்டத்தில் அறிவிக்கப்பட்டதாம்.

தேவார ஆசிரியர் மூவர் (இந்தியர்) இலங்கையில் தங்குதற்கு உத்தரவு கேட்பதாகவும் சிவராத்திரிநாள் விடுமுறை நாளாக்கப்பட வேண்டுமென்று கேட்பதாகவும் குறித்த கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாம்.

# தொற்றுநோய் தடுப்பு வேலை

## மாணவர்பொருட்டு விரைவிற்செயப்படும்

வெள்ளப்பெருக்குக் காரணமாய்ப் பல இடங்களில் தொற்றுநோய்கள் உண்டாகக்கூடுமென்று கண்டு அவற்றுள் நெருப்புக் காய்ச்சலை முதலாவதாகக் கணித்து அவற்றைத் தடுத்தற்குப் பல வழிவகைகளை அரசாங்க சுகாதாரப் பகுதியார் கையாளும் ஒழுங்கு செய்கின்றனர். அவற்றுள் மாணவருக்கு ஊசி மருந்து கொடுத்தல் மிக முக்கியமாகக் கவனிக்கப்படும். வித்தியா பகுதியாரும் தலைமை ஆசிரியர்களும் இத்துறையில் வேண்டியது செய்யுமாறு கேட்கப்பட்டிருக்கின்றனர். பிள்ளைகளைப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்ப முன்பே ஊசி மருந்து கொடுத்து விடுமாறு சுகாதாரப் பகுதியார் பெற்ருரையும் கேட்டு நிற்கின்றனர்.

மாணவர் பொருட்டு மிக முக்கியமாக இது உடனே செய்யவேண்டுமென்று தெருவித்ததோடு நாட்டு மக்கள் யாவரையும் வேண்டிய பாதுகாப்புச்செய்யுமாறு சுகாதாரப் பகுதியார் கேட்டு நிற்கின்றனர். வளவுகள் கிணறுகளைச் சுத்தஞ் செய்யும் முயற்சி ஒவ்வொருவரும் உடனே மேற்கொள்ளவேண்டியதாகின்றது.

# உங்கள் நக்ஷத்திரம்?

எங்கள் சோதிடம்

ஸ்ரீ ராதாகிருஷ்அன கணிப்பது.

[ இவ்வாரப் பலன்கள் 19—1—58—— 25—1—58. ]

**மேடராசி அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.**

மனச் சமாதானமிருக்க மாட்டாது. வழக்கத்திலும் பார்க்க வேலை கூடுதலாயிருக்கும். ஆனல் போதிய அளவுக்கு உமககுப் பதிலுபகாரம் தரப்படும். உம்முடைய கந்தோரில் இன்னமும் சிறிது காலத்துக்குக் கருமங்கள் ஒழுங்காய் நடக்கமாட்டா.

**இடபராசி கார்த்திகை 2, 3. 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்,**

வாரத்தின் முதல்நாள் உம்மை அதிகம் நிலைகுலைக்கும். மனச்சலனத்துக்கும் நண்பருடன் பிழை எண்ணத்துககும் இடமுண்டு. குடும்பச்சூழலில் எல்லாம் நல்லாயில்லை. இரகசியப் பகைவர்மூலம் தொந்தரவுகளுக்கும் இடமுண்டு.

**மிதுனராசி மிருகசீரிடம், 3, 4 திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3, 1ம் பாதம்.**

ஞாயிறு பிற்பகல் திங்கள் செவ்வாய் தொந்தரவானவையாயிருககும். உம்முடைய எல்லாக் கருமங்களிலும் கவனமாயிருக்கவும். வார மிகுதி நல்லாயிருக்கும், தனலாபம் நிச்சயம். சிறு சுகவீனங்கள் உண்டாகக்கூடும்.

**கடகராசி புனர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்,**

இனத்தவாகளுடன் சண்டைகளுக்கிடமுண்டு. உமக்கு மனச் சமாதானமிருக்கமாட்டாது.குடும்பச்சூழலிற் பிழை எண்ணங்களுக்கும் இடமுண்டு. புதனும் வியாழமும் எல்லாவற்றிலும் [illegible]தானவை.

**சிங்கராசி மகம், பூரம், உத்திரம் 1ம் பாதம்,**

ஒரு தளப்பமான வாரம் உம்முடைய கருமங்கள் எல்லாவற்றிலும் நீர் கவனமாயிருக்கவேண்டும். புது முயற்சிகள் நல்ல சித்திதரவில்லை, நண்பர்களுடன் பிழை எண்ணங்களுக்கும் இரகசியப் பகைவர் மூலம் தொந்தரவுகளுக்கும் இடமுணடு. வெள்ளி சனி கவனமாய்க் கழிக்கவும்,

**கன்னிராசி உத்தரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.**

சிறு சுகவீனங்கள் தவிர இந்த வாரம் நல்லதாயிருக்கும். உம்முடைய முயற்சிகளை நீர் இலகுவாக ஒழுங்கு பண்ணக்கூடியதாயிருக்கும் தன லாபங்களும் போட்டியிடுவோரை வெல்லுதலும் நிச்சயம். உம்முடைய திட்டங்களை முன்னேற்றுக.

**துலாம், சித்திரை 3 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.**

இந்த வாரம் வழக்கத்திலும் கூடின வேலை உமககு வரும். செலவும் அதிகரிக்கும். உம்முடைய எல்லா முயற்சிகளிலும் அதிக இடையூறுகள் உண்டாகும், ஆனல் இறுதியில் நீா சித்தியடையக்கூடியதாயிருக்கும்.

**விருட்சிகராசி விசாகம் 4.ம் பாதம் அநுஷம், கேட்டை.**

கருமங்கள் இந்தவாரம் குழப்பமாயிருக்கும். சிக்கல்கள் தீர்ப்பதில் நீர் முழுதும் ஈடுபட்டிருப்பீர். சுகவீனங்களுக்கும் இடமுண்டு. சண்டைகளுக்கும் [illegible] எண்ணங்களுக்கும் இட[illegible]யில்லை.

**தனுராசி மூலம் பூராடம் உத்தராடம் 1ம் பாதம்,**

உத்தியோகக் கருமங்களுக்கு ஒரு நல்ல வாரம். உம்முடைய எல்லா முயற்சிகளிலும் நீர் அதிகம் முன்னேறககூடியதாயிருக்கும் தன லாபங்களும் புகழும் நிச்சயம். ஆனல் தேகசுகம் விசேட கவனம் கொடுககப்படவேண்டும்.

**மகராராசி உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.**

தேகசுகம் சிறிதுப் நல்லாயிருக்கமாட்டாது. இனத்தவர்களுடன் சண்டைகளுக்கிடமுண்டு. செலவதிகரிக்கும், இடைஞ்சல்களிலிருந்து நீங்க நண்பர்கள் உமக்கு உதவி செய்வார்கள். நடைமுறைகளில் மாற்றங்களுக்கிடமுண்டு

**கும்பராசி அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,**

உமது காலம் மிகமிக நல்லதாக மாறுகின்றது புதுமுயற்சிகள் மிகுந்த சித்தியடையும் தன லாபமும் புகழும் நிச்சயம் வார இறுதியில் சிறு சுகவீனங்களுக்கிடமுண்டு.

**மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி**

கந்தோரில் தொந்தரவுகளுக்கிடமுண்டு. தேக சுகமும் சிறிதும் நல்லாயிருக்கமாட்டாது. பல அவமானங்களும் பிழை எண்[illegible] புதிதாய்த் தொடங்கவேண்டாம்.

இந்துசாதனக் கல்விக் கதிர்

சந்தா விபரம்

தனிப்பிரதி சதம் ஐந்து
தபாற்செலவுடன் ஓர் ஆண்டிற்கு
தனிப்பிரதி ரூபா 2-25
2 பிரதிகள் „ 3-50
3 பிரதிகள் „ 5-00

அதிபர், "இந்துசாதனம்" யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுரைத்தமிழ்ச்சங்க ஆண்டுவிழா

## நீதிபதி சுப்பிரமணியம் அவர்களின் சொற்பொழிவு

தமிழ்ச் சங்கத்திற்குக் கடை அல்லது இறுதி என்ற இழுக்கு இருந்தமையை நீக்கிய புகழ் இச்சங்கத்தைச் சாரும். இது நாலாம் சங்கமானமையின் இதுகாறும் கடைச்சங்கம் என்று வழங்கப்பட்ட மதுரைத் தமிழ்ச் சங்கம் இனி மூன்றும் சங்கம் என வழங்கப்படும்.

மூன்றும்சங்கம் செயலற்ற பின்னும் தங்களது அன்புக்கும், சேவைக்கும பாத்திரமான இறைவன் தமிழ்இசையில் உருக வேண்டும். அவனது அருள்வாக்கு தமிழ்வாக்காக இருக்க வேண்டும் என்றநாட்டம் தமிழ்மக்களிடம் ஒருசிறிதும தணியவில்லை இறைவனும் இணங்கித் தமிழில் நூல் இயற்றினுன்; அறிவுரை செய்தான். அடிஎடுத்துக் கொடுத்தான்; தடுத்தாட்கொண்டான். இறைவன் கருணைக்குத் தாம் பாத்திரமானதற்குச் சான்றுய் திருநாவுக்கரசர் 'தமிழோடு இசைபாட மறந்தறியே' என்று முறையிட்டார். அவன் மனம குளிர்ந்தான் திருமறைக்கட்டில் திறக்கப்பாடினுர் அவரினும் செந்தமிழ் உறைப்பாடி அடைப்பித்தார் சமபந்தர்.

இவ்வாறெல்லாம் தண்ணுர் தமிழ், தென்தமிழ், தீந்தமிழ், பசுந்தமிழ், கன்னித்தமிழ். தெய்வத்தமிழ் என்று பெயரிட்டுத் தமிழ் இன்புறுவதெல்லாம் ஏதோ காக்கைக்குத் தன் குஞ்சு பொன் குஞ்சு என்ற முறையில் ஏற்பட்ட கேவலம் இயற்கை வாஞ்சை தானு அல்லது உண்மையிலேயே இம்மொழிக்கு அழகுடன் பொருள் தாங்கி உணர்த்தும்வலியும் நலனும் உளதா என ஒருசிறிது சிந்திக்கலாம.

பழும் சிறப்பு

கிரேக்கதேசம், உரோமாபுரி, எகிப்து, பபிலோனியா, பாரசீகம்; அரேபியா முதலிய நாடுகள் குன்றின்மேல் விளக்காய் விளங்கிய காலந் தொட்டே தமிழ்நாட்டின் ஒளி நாகரிகம் உலகமெங்கும் பரவி வந்திருக்கிறது. மூன்றுவது சங்ககாலத்திலேயே தமிழரதுவாழ்க்கை அநேக ஆயிர வருடங்களாக நாகரிகமுறையில் நடத்தப்பட்ட வாழ்க்கையாதலால் தமிழ்ச் சமுதாயம் சில வரையறைகள், சட்ட திட்டங்களுக்குட்பட்டதாய் உயர்ந்த குறிக்கோள்களைத் தன்னகத்தே அமைந்ததாய் விளங்கியது. அந்நாகரிகத்தின் நலன்களையும் கொள்கைகளையும் வகுத்து உலகுக்கு ஈந்தார் வள்ளுவனுர் ஒவ்வொரு குறளும் அநேக ஆயிர வருடங்களின் அனுபவங்களை ஒரு சிறு அளவில் திரட்டித்தரும் ஒரு தங்கக்கட்டி, நான் குறள் படிக்கத் தொடங்கிய காலமுதலே என்நினைவினின்றும் என்றும் அகலா நிற்கும்குறள் ஒன்று உண்டு அதாவது;-

"ஆக்க மதர்வினுய்ச்
செல்லு மசைவிலா
வூக்க முடையா னுழை"

எவனொருவன் செல்வமோ, பதவியோ, புகழோ, மற்றொருநலனே அடைய விரும்பின். தான் அதை அடைவேன் என்ற நம்பிக்கையில் என்றும் தளர்வற்றவனுய் அதற்குரிய முயற்சியில் இடையருது ஈடுபட்டு வருவானுயின் அந்நலன் அவனிருக்குமிடத்திற்கு வழிகேட்டு அவனை வந்தடையும் என்பது அதன் கருத்து. அநேக நூறு பக்கங்களில் ஆங்கிலத்தில் விளக்கவேண்டியிருக்கும் ஓர் உண்மையை ஆறு சொற்களில் அழகாக விளங்கவைக்கும் வனப்பும் வன்மையும் பெற்ற மொழி நம்மொழி! அவ்வாறே குறள் ஒவ்வொன்றும்; அவ்வாறே சங்க நூல் ஒவ்வொன்றும்.

சில நூற்றுண்டுக்குப் பின் தேவாரம், திருவாசகம், பிரபந்தங்கள் முதலிய பக்தி நூல்களில் தமிழ் இறைவனுக்கும், சமயத்திற்கும், மக்களுக்குப் செய்த சேவை அம்மொழியின் இதர பல நயங்களையும், திறன்களையும மிளிரச் செய்தது. திருவுந்தியார் முதல் சிவஞான மாபாடியம் வரையுள்ள சைவ சித்தாந்த நூல்களால் யோக ஞானம் வாய்ந்த அருந்திறத்தவர் கூர்மையாய் ஆய்ந்து அறியும் நூலளவிலேநிற்கும் உண்மைகளையும் தெளிவுபடக்கூறும் திறன் தனக்கு உளது என்று நம் மொழி நிரூபித்தது. பல மொழிகளைக் கற்றறிந்த ஐரோப்பியப் பேரறிஞர்பலர் தமிழைப் படித்துப் பாடிப் பேரானந்தம் உற்றனர் என்பது நமக்கு மகிழ்சியைத் தருகின்றது. ஆனல் வியப்பல்ல.

பாண்டித்துரைக்குப் பாராட்டு

தகைமை தாங்கியதும், இனிமை பயப்பதுமான மொழியைத் தம் தாய்மொழியாய் பெற்ற தமிழ் மக்கள் அதன்மீது சென்ற நூற்றுண்டில் போதிய அன்பு செலுததாதிருந்தது. இறைவனைச் சார்ந்து தமிழையே தனக்குற்ற துணையாகக் கொண்டிருந்த உயர்திரு பாண்டித்துரைத்தேவரவர்களால் தாங்கமுடியாததாயிற்று. ஒரு சமயம் அவர்கள் இராமநாதபுரத்திலிருந்து மதுரைக்கு வந்திருந்தபொழுது அவர்கள் நண்பர் எவர் வீட்டிலும் கம்பராமாயணமாவது, திருக்குறளாவது இல்லையாம். அவர்களது அன்பு, சக்தியாய் மாறி, தமிழ்மக்களிடையே தமிழ்ப்பற்றும், தமிழறிவும் பரவுமாறு இச்சங்கத்தை 1901-ம் ஆண்டு நிறுவினுர்கள். அதன் பின் பத்தாண்டுக் காலம் இச்சங்கத்தின் வளர்ச்சியிலே கண்ணும் கருத்துமாய்த் தங்கள் உடலாலும், பொருளாலும், அன்பாலும் அதை யூட்டி வளர்த்து இறைவன் திருவடி நிழலை அடைந்தார்கள். அவர்கள் எண்ணியாங்கு இச்சங்கம் தமிழுக்கும் உலகுக்கும் பயனளிக்கும் முறையில் அதனை நிலைபெறச் செய்வதே தமிழ்மக்கள் அவர்களுக்குச் செய்யக்கூடிய கைமாறு. அவர்களை என்றும் மறவாதிருத்தலும் நம்கடன்.

## ஆசிரியரும்-மாணவனும் சம்பாஷணை

4-ம் பக்கத் தொடர்ச்சி

மாணு; அவ்வாறு நாயன்மாரும், ஞானிகளும் கண்டார்கள் என்பதற்கு ஆதாரமென்ன?

ஆசி; நாயன்மாரும் ஞானிகளும் இருந்தார்கள் என்பதற்கு அவர்கள் இயற்றிய அரிய தேவாரங்களும் பாடல்களும் சான்று பகர்கின்றன அத்தேவாரங்கள் தோறும் தாம் தாம் கண்ட கடவுளின் தத்துவத்தை எடுத்து விளக்கி யிருக்கிறுர்கள். திருநாவுக்கரசு சுவாமிகள் காயமே கோயிலாக இறைவனை வைத்து வணங்கினுர்கள். தாயுமானவர் பார்க்குமிடமெல்லாம் இறைவன் நீக்கமற நிற்பதாகக் கூறினுர். அவர்கள் கடவுளைக் கண்டார்கள் என்பதற்கு அவை சான்றுகின்றன. எனவே பெரியார்கள் காட்டிய மேலான வழியைப் பின்பற்றி நாமும் சதா தெய்வ வழிபாடு முதலியன செய்வோமானுல் ஆண்டவனின் திருவருளைப் பெற முடியும்.

மாணு; தங்களுடன் சம்பாஷித்ததில் எத்தனையோ அரிய உண்மைகளை அறிய முடிந்தது. எனது மனத்தில் இருந்த சந்தேகங்களும் நீங்கின. இனிமேல் கோயிலுக்குப்போகிறேன்.

ஆசி; கோவிலுக்கு நேரமாகிறது.

மாணு; நமஸ்காரம்
போய்வருகிறேன்.

### கைலஞ்ச விசாரணை

யாழ்ப்பாண நகரசபையிற் சென்ற சில ஆண்டுகளாய்க் கைலஞ்ச ஊழல்கள் இடம் பெற்றுவிட்டன என்ற கருத்துப் பட்டினத்திற் பரவியிருந்தது. புதிய நகரசபை ஆட்சியின் ஆரம்பச் செயலாய் இக் கருத்துப்பற்றி ஆராய்தற்கு ஓர் கைலஞ்ச விசாரணைச் சபை அமைக்கப்படுதல் வேண்டுமென்னும் பிரேரணை ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளதாம்.

### காங்கேசன்துறையைத் துறைமுகமாக்குக

பெரு வெள்ளத்தாற் புகையிரதப் போக்குவரத்துப்பாதிக்கப்பட்டு நிலைமை மோசமாயிற்று. அப்பொழுது நிலைமையைச் சமாளிப்பதற்கு உணவுப் பொருள்களும் கப்பல்கள் மூலம்காங்கேசன் துறைக்கு அனுப்பப்பட்டன. ஏன் அப்படித் தொடர்ந்து அனுப்பக்கூடாது என்ற கேள்வியை எழுப்பி அப்படி அனுப்புவதால் இப் பகுதியில் உணவுப்பொருள்களின் விலையைக் குறைக்கலாமென்றும் வேலையில்லாதோருக்கு வேலை கொடுக்கலாமென்றும் சுட்டிக்காட்டி காங்கேசன் துறையைத் துறைமுகமாக்குமாறு திரு. எஸ் ஜே. வி. செல்வநாயகம் அரசாங்கத்தைக்கேட்டிருக்கின்ருராம்.

### நாடற்றவர்பற்றி ஐ நா. சபையிற் பேச்சு

ஐக்கிய நாட்டுச்சபையின் பொருளாதார சமூக சீர்திருத்த உபசபையில் இந்திய பிரதிநிதி கலாநிதி ஏ கிருஷ்ணசாமி அவர்கள் பேசும்போது 1939-ம் ஆண்டு வரையும் எல்லா உரிமைகளையு முடையராயிருந்து வந்த இலங்கை இந்திய மக்களை இப்பொழுது நாடற்றவர்களாக்கி யிருப்பது பெரும் நீதியீனமென்று எடுத்துக் காட்டி அதை நீக்குதற்கு ஐக்கிய நாட்டுச்சபை முயற்சிக்கவேண்டுமென்று கூறினுர்.

### மதுரைத் தமிழ்ச்சங்கம்

மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் 55-ம் ஆண்டு விழா 28-12-57 சனிக்கிழமை சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி திரு. வி. சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் பல அறிஞர்கள் சொற்பொழிவாற்றினுர்கள்.

## நேயர்கள் நெஞ்சம்

ஆசிரிய அன்ப!

## அருட்பாடலைத் திருத்தும் ஓர் திருக்கூட்டம்

சென்றவெள்ளிக்கிழமை வெளியான இந்துசாதனத்தில் திரு. அ. சபாபதிப்பிள்ளை அவர்கள் கோத்திரப் பாக்களைத் திருத்தும் திருக்கூட்டத்தாரின் விபரீதக் கருத்துக்கள் பற்றி எழுதியுள்ளார். அவர் எழுதியபடி, எம் சமய நூலாராய்ச்சியுடையார் சகவாசமேனும் இலராய் இக்காலப் பொதுவுடைமை நூல்களைக் கற்று அந்நூலுடையார் சகவாசம் பெரிது முடையராய்த் தாம் கொண்ட கொள்கையே நன்னெறியென்னும் கோட்பாடுடையராகின்றனர் பலர்.

வேறுசிலர் கிறீஸ்தவம், இஸ்லாம், புத்தம், வைணவம், சைவம் முதலிய எல்லா மதத்திற்கும் கடவுள் ஒருவரே என்னும் பொதுக் கொள்கை மாத்திரமுடையராகின் றனர்

சைவம் என்னும் சொல் சிவத்தைக் குறிப்பதாகும். அஃது அருள் நெறியெனவும் பொருள்படும். வேதநெறியின் வழி வருவது. மணிவாசகப் பெருந்தகையாரும் "சைவா போற்றி தலைவா போற்றி" எனப் பரம்பொருளை வியந்துகூறியுள்ளார். ஆண்டவனுக்குச் சைவன் என்னும் பொருள் உண்டு. இவ்வித அருட் சொற்களுக்குப் பொருள் தெரியாது மயங்கி வேறு விபரீதக் கருத்துக்கொண்டு அருட்பாடல்களில் மாற்றம் செய்வோர் பெரும்பாதகத்திற்கு ஆளாவார்கள். தவத்திற்கே பங்கமாகிறது. சைவத்திற்கிளைத்த மகான் கச்சியப்ப சிவாச்சாரிய சுவாமிகள் அருளிய செய்யுளை மாற்றம் செய்ய முற்பட்ட திருக்கூட்டத்தாரின் மனநிலைமை எத்தகையதென்று தான் கூறுவோம்.

அருட்பாடல்களில் ஒரு எழுத்துப் பிழை தானும் இலலாமல் படிக்க வேண்டிய கடமை இருக்கவும் சொற்களை மாற்றம் செய்வது சிவத்துரோகமாகும். மழை இல்லாவிட்டால் உலகம் வாழமுடியாது. நன்மை தீமைகளை உண்டாக்குபவனும் ஆண்டவனே! ஆண்டவன் திருவருளால்தான் எதுவும் நடைபெறுகிறது. தர்மம் குன்றி அதர்மம் தலையெடுக்கும் நேரத்தில் ஆண்டவனே சகல நன்மை தீமைகளையும் ஆக்கி அழிக்கிறுன். அண்மையில் உண்டான பெருவெள்ளம் நன்மைக்கென்றே நாம் உணர வேண்டும். இனிமேலாவது மக்கள் தர்ம வழியில் நடந்து கொள்வார்களென்று பலர் கருதுகின்றனர் எத்தேசத்திலும் சிவநெறி குன்றி அதர்மம் தலைப்படுமானுல் பெருந் துன்பங்கள் நேரிடுமென்பது ஓர் உண்மை. தவப்பெரியோர்கள் பாடிய கருத்துகளை அற்ப அறிவுகொண்டு நாம் எவ்விதமாயும் மாற்றம் செய்யாது உள்ளதை உள்ளவாறே உணர்ந்து ஒழுகுதல் வேண்டும். இனியாவது மேலே குறித்த திருக்கூட்டத்தார் இவ்விதமாற்றம் செய்யாது அருள் வழி நின்று ஒழுகுவார்களென நம்புகிறேம்.

செ. கோவிந்தசாமி
தென்மயிலை
செயலாளர் அகில இலங்கைச் சிவனடியார் சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியல் அலை

*1-ம் பக்கத் தொடர்ச்சி*

### ஒப்பந்தத்துக்கு இன்னும் உயிர் இருக்கின்றதா?

பழங்கதையாய் விட்டது என்றுபலர் நினைத்தார்கள். பாய்ந்த வெள்ளத்துடன் இருந்த இடம் தெரியாமற் போய்விட்டதென்று பிரதமர் எண்ணிப்போலும் அல்லல் ஐக்கியத்தை உண்டு பண்ணிவிட்டதென்று ஆனந்தம் கொண்டார். ஆனல் இப்பொழுது சமஷ்டிக்கட்சியார் அந்த ஒப்பந்தத்தைப்பற்றி ஞாபகப் படுத்தி எச்சரிக்கையும் செய்திருப்பதைப் பார்த்து, திருபண்டாரநாயக கட்டிய மனக்கோட்டை வெள்ளம் வற்ற மறைந்து விடுமோ என்று கலங்கும் நிலைமை தோன்றியிருக்கின்றது.

வெள்ளத்தால் நிகழ்ந்த விபத்து சிங்களச்'சிறி'மீது கொண்ட சீற்றத்தையும் மாற்றிவிட்டது. முன் சிங்களச்சிறி பொறித்த மோட்டார் வண்டிகளைத் தமிழகத்திலே காண்பதரிதாயிருந்தது. வெள்ளத்தின் பின் வேண்டியமட்டும் விரும்பியபடி 'சிங்களச்சிறி' காட்சியளிக்கின்றது.

ஒப்பந்தத்துக்கு முரணுயிருக்கின்றதுஎன்று சமஷ்டிக் கட்சியினர் சொல்வதைப் பார்த்தால் இதுவரையும் அதாவது உள்ளூர் ஆட்சி மந்திரியார் அந்த அமைச்சின்கீழ் உத்தியோகத்திலமர்ந் திருக்கின்றவர்கள் சிங்களம் படிப்பதைப் பற்றிக் கூறும் வரைக்கும் இந்த ஒப்பந்தத்துக்கு முரணுக ஒன்றும் நடைபெறவில்லை என்று பொருள்படுகின்றது. ஒப்பந்தத்தைப் பொருட்படுத்த அதற்குச் சார்பாக என்ன இதுவரையும் ஆட்சியாளரால் நடைபெற்றிருக்கின்றதென்று பொதுமக்கள் அறிய விரும்புகின்றூர்கள்.

### கோட்டு விற்பனவு விளம்பரம்

கரம்பன் வயித்தியாம்பிள்ளை சவிரிமுத்து
இல, M. B. 1497
வளக்காளி
. எதிராக
சரவணை காத்திகேசு பசுபதி
—எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 1497-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் துண்டுக்காணி 1958 ஹு மாசி மீ 14 உ. வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை மூதல்வட்டி ரூபா 2437-50-ம் இதில் ரூபா 1500-க்கு 19-2-57 திகதி தொடக்கம் 20-5-57 வரைக்கும் வருடமொன்றுக்கு 100-க்கு 15 வீத வட்டியும் அதன்மேல் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 196-40.

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி ஊர்காவற்றுறைக் கோவிற்பற்று சரவணை இறை இராசிமா நிலப்பரப்பு 5 3/8 ம் கிணற்றுப்பங்கும் எல்லை கிழக்கு சுன்னத்துரை பெண் அன்னம் வடக்கு நாகலிங்கம் பெண் வள்ளியம்மையும் நாகநாதன் நாகமணியும், பேற்கு நாகநாதன் நாகமணயும், இளையதம்பி செல்லத்துரையும் தெற்கு ஒழுங்கை, இதடங்கலும்.

ஆ. ச. கந்தையா,
கொமிஷனர்

காரைநகர்.
2-1-58.
M 203 17-1-58,

### கோட்டு விற்பனவு விளம்பரம்

வலிகாமம் மேற்கு ஐக்கிய விளைபொருள் சங்கத் தலைவர் சுப்பிரமணியம் ஆறுமுகம்
(சங்கப்பதிவு நம்பர் 1050)
சங்கானை
வழக்காளி
இல. M B 661
எதிராக
வீரசிங்கம் நடராசா அராலி மேற்கு
எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 661-ம் இலகக வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் காணி 1958 ஹு மாசி மீ 8உ சனிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 450-ம் இதற்குத் தீர்வை ரூபா 400-க்கு 23-11-58 திகதி தொடக்கம் 4-6-56 வரை 100க்கு 4 வீத வட்டியையும் பின் இறுபடும்வரை முழுத் தொகைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு 125-85. இதில் ரூபா 75 குறித்த வழக்கில் கட்டப்பட்டது.

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கேற்கு வட்டுக்கோட்டைக் கோயிற்பற்று அராலி மேற்கு இறை நெற்பரப்பு 8 1/2 எல்லை கிழக்கும் வடக்கும் முருகர் சபாபதி பெண் சின்னம்மா மேற்கு கந்தையா கைம்பெண் வேதநாயகமும் தெற்கு விஞசித்தம்பி கணபதிப்பிள்ளை விஞசித்தம்பி வேலுப்பிள்ளையும் இது அடங்கலும் இன்னும் கிழக்கு எல்லையில் இருக்கும் கிணற்றில் 4இல் ஒரு பங்கும் தூர்வை வழிவாய்க்காலும். இக்காணி 295/80 நம்பரில் பதியப்பட்டது,

சி. சே. மாரிமுத்து
கொம்மிஷனர்
"விதானை வளவு"
சித்தங்கேணி
4—1-58.
M, 204 17-1-58

### கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக் கோட்டில்
வேலணை மேற்கு
கந்தன் கோயிலான் —வழக்காளி
எதிராக
இல. M B 1302
1. வேலணை மேற்கு முருகன் கந்தையா
2 ஷை யூர் பெண் வள்ளிப்பிள்ளை
3. சரவணை வயித்தியாம்பிள்ளை சவரிமுத்து
—எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் B 1302 ம் இலககவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக காணி 1958ம் ஹு மாசி மீ முதலாந் திகதி சனிக்கிழமை முற்பகல் ஒன்பது மணி தொடக்கம் அந்தந்தக் காணிககுள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை :- முதல் வட்டி ரூபா 1103ம் ரூபா 732 க்கு 31-10-56 தொடக்கம் 11-12-6 வரை 12 வீதமான வட்டியும் அதன்மேல் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீதமான வட்டியும் கோட்டுச செலவு ரூபா 193-90 சதம். தீர்வைத்தொகையில் ரூபா 300ம் கோட்டுச்செலவில் ரூபா 130ம் கொடுபட்டது

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி வேலணைக் கோவிற்பற்று வேலணை மேற்கிறை "செட்டில்" பரநெ இல பன்னிரண்டு (12) கிணறும் வீடும் பனைகள் வடலிகளும் எல்லை கிழக்கு காலஞ்சென்ற சேதுபதி சின்னையாவின் உரிமைக்காரரினுதனம். வடக்கு சங்கரப்பிள்ளை கயிலாயநாதருக்கும் கந்தையா பெண் பாறுபதிக்குமுரிய வாதனம் மேற்கு ஒழுங்கை. தெற்கு இளையவன் நாகமுத்துவிற்கும் சகோதர சகோதரிகட்குமுரிய வாதனம். இதடங்கலும்.

காரைநகர்
1957ம் ஹு மார்கழிமீ 7 ம்திகதி
வை ஏரமபமூர்த்தி,
கொம்மிஷனர்,
M 206 17-1-58,

### கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக் கோட்டில்
காரைதீவு கிழக்கு சிதம்பரப்பிள்ளை சண்முகம் கனகரெத்தினம் வழக்காளி
இல. M. B. 1499
எதிராக
1 நாரந்தனை யோவான் பேதுறு
2 ஷை யூர் பெண் பூரணம்
3 பண்டியன்தாழ்வு யாழ்ப்பாணம் மரிசிலின் பிரான்சஸ்
4 ஷை யூர் பெண் ஞானப்பிரகாசி எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 1499-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் இரண்டு துண்டுக் காணிகள் 1958 ஹு மாசி மீ 5 உ புதன்கிழமை முற்பகல் ஒன்பது மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலததில் விற்கப்படும்,

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 2746-ம் ரூபா 2000-க்கு 20-2-57 தொடக்கம் 4-6-57 வரை 18 வீதமான வட்டியும் அதன்மேல் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீதமான வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 242-30 சதம்.

காணிகளின் விபரம்

1 வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி ஊர்காவற்றுறைக் கோவிற்பற்று நாரந்தனையிறை "நாரந்தனைப் புலம்" பரநெ இலா. பதினெட்டு (18) பனைகளும் கிணற்றுப்பாகமும் எல்லை கிழக்கு அவுருன் சவிரிமுத்துவிற்கும் மறுபேருக்குமுரிய வாதனங்கள் வடக்கு T வஸ்தியாம்பிள்ளை சூசைப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள் மேற்கு செல்லையா பெண் ஆச்சிமுத்துவிற்குரிய ஆதனம் தெற்கு அந்தோனி பெண் ஆனுகதைகசூரிய ஆதனம்.

2 ஷை தீவுப்பகுதி சரவணையிறை "சூரியபத்தையும் சூரியவத்தையும்" பரநெ இலா 12 எல்லை கிழக்கு 'பாவிலு யோவானுக்குரிய ஆதனம் வடக்கு வயித்தியான் பர்ஞந்துவிற்குரியவாதனம். மேற்கு சந்தியோகு பெண் யக்கோவாளுக்குரிய வாதனம் தெற்கு நீக்கிலான் கைம்பெண் மரிசிலினுக்குரிய வாதனம் இதடங்கலும் பனைகளும் மிகுதிக் காணியிலிருக்கும் கிணற்றுப்பாகமும் தூர்வை வழிவாய்ககாலும்,

1957-ம் ஹு மார்கழி மீ 21 உ
வை. ஏரம்பமூர்த்தி
கொம்மிஷனர்
M 205, 17-1-58

### விவேகானந்த சபை வளர்ச்சி

தைப்பொங்கல் திருநாள் கொழும்பு விவேகானந்த சபையில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அத்தருணம் தலைவர் திரு. சு. சிவசுப்பிரமணியம் அவர்கள் பேசும்போது விவேகானந்தசபை நிலயத்துக்கடுத்துள்ள ரூபா 85,000பெறுமதியான நிலத்தை வாங்கும் முயற்சி நன்கு முன்னேறுகின்றதென்று குறிப்பிட்டு அடுத்த தைப் பொங்கலுக்கு முன் அது பூர்த்தியடையுமென்ற நம்பிக்கையையும் தெரிவித்தார். அவ்வாறு பூர்த்தியடையச் செய்தற்கு வேண்டிய உதவி புரியுமாறு இலங்கை, இந்தியா, மலாயா ஆகிய இடங்களிலுள்ள சைவ மக்களுக்கு ஓர் வேண்டுதலும் விடுத்துள்ளார்.


யாழ்ப்பாணம்

## ஐக்கிய இலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா
**616313,00**
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்,

தினசரிப் பற்றுவரவு.

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமாஞல் ஒருவிகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என் மூலமாக அறிந்து கொள்ளலாம்


S. கனகசபை
சிறுப்பர்

Std 14



## ஜீ. ஸீ. ஈ. இலக்கியர்

திருவிளையாடற்புராண வசனச்சுருக்கம்
அரும்பதவுரை, செய்யுள்உரை முதலியவற்றுடன்.
விலை சதம் : 50.
மனேஜர், 'இந்துசாதனம்' யாழ்ப்பாணம்.



யாழ்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணூர்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் நாவலர்வீதி 245-ம் இலக்கததில் வசிக்கும்திரு. சுப்பையா பொன்னம்பலம் கந்தையா அவர்களால் 17-1-58 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

ஆசிரியர் : நம. சிவப்பிரகாசம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org